# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## இரண்டாம் வருட கலைமாணித் தேர்வு – 2009/2010

## மீள்பரீட்சை - வெளிவாரி (2017 – March/April)

## EDU 201 பிள்ளையின் அபிவிருத்தியையும் கற்றலையும் விளங்கிக்கொள்ளல்

## (Understanding Child development and Learning)

நேரம்: 03 மணித்தியாலங்கள்

ஏதாவது ஐந்து(05) வினாக்களுக்கு விடை தருக.

---

01. அ. கற்றல் தொடர்பான உமது அபிப்பிராயங்களை "உயிரியின் கற்றல்" தொடர்பாகப் பல்வேறு அறிஞர்களின் கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு விளக்குக. (10 புள்ளிகள்)

    ஆ. குழந்தையின் கற்றலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக. (10 புள்ளிகள்)

02. அ. சமூகவிளையாட்டுக்கள் பிள்ளையின் இயக்கத்திறன் வளர்ச்சியில்பெறும் முக்கியத்துவத்தினைப் பின்குழந்தைப் பருவத்தினை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (10 புள்ளிகள்)

    ஆ. மனவெழுச்சிப் பிரச்சினைகள் குழந்தைகளின் கற்றலில் ஏற்படுத்தும் தாக்கத்தினை உதாரணங்கள் மூலம் தெளிவுறுத்துக. (10 புள்ளிகள்)

03. அ. "முயன்று தவறுதல்" கொள்கையில் தோண்டைக் முன்வைத்த பயிற்சி விதி, விளைவு விதி, ஆயத்த விதி ஆகியன ஒரு ஆசிரியரினால் எவ்வகையில் பிரயோகிக்கப்படுகின்றது என்பதனை நடைமுறை உதாரணங்களுடன் விபரிக்குக. (10 புள்ளிகள்)

    ஆ. தொழிலி நிபந்தனைப்பாட்டுக் கொள்கையில் ஸ்கின்னர் குறிப்பிடும் பின்வரும் தொழிற்பாட்டு நடத்தைகளை உதாரணங்கள் மூலம் விளக்குக.

    1. நேர் - எதிர் மீளவலியுறுத்தல்
    2. பின்னூட்டல்
    3. தொடர் மீளவலியுறுத்தல் மூலம் நடத்தை உருவாக்கம் (10 புள்ளிகள்)

04. அ. கற்றல் இடமாற்றம் என்றால் என்ன? என்பதனைச் சுருக்கமாக விளக்கி, கற்றல் இடமாற்ற வகைகளை உதாரணங்கள் மூலம் தெளிவுறுத்துக. (10 புள்ளிகள்)

    ஆ. ஞாபகத்தின் மூன்று படிநிலைகளையும் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

05. அ. ஒருவனுடைய நடத்தையானது அவன் வாழும் சூழல் சார்ந்தது என்பதற்கான ஆதாரங்களைச் சூழல் வாதிகளின் கருத்துக்களின் அடிப்படையில் விளக்குக. (10 புள்ளிகள்)

    ஆ. ஆளுமை வளர்ச்சியில் பங்கெடுக்கும் காரணிகளைச் சுருக்கமாகக் குறிப்பிட்டு, ஆளுமையை அளவிடும் முறைகளுள் ஒன்றான புறத்தேற்று நுண்முறையின் முக்கியத்துவத்தை ஆராய்க. (10 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றினைச் சுருக்கமாக விளக்குக.

அ.பிள்ளைகளின் எண்ணக்கரு உருவாக்கத்தில் பங்கு கொள்ளும் காரணிகள்

ஆ.புலக்காட்சி

இ.நுண்மதி ஈவு

ஈ.பழைய நிபந்தனைப் பாட்டுக்கொள்கையின் வகுப்பறைப் பிரயோகம் (4x5=20 புள்ளி

07. அ. இயல்பூக்கம் என்றால் என்ன? என்பதனை விளக்கி, மக்டுகல் இயல்பூக்கக் கொள்கை குறிப்பிடும் ஊக்கல்களை ஓர் ஆசிரியர் எவ்வாறு கற்றலுக்குச் சாதகமாகக் கையாள எனப்பரிசீலனை செய்க. (10 புள்ளி

ஆ. மாஸ்லோ ஏறுவரிசைப்படுத்தியுள்ள தேவைகளைப் படிமுறையில் விளக்குவதுடன் கற்ற கற்பித்தல் செயன்முறையில் அவற்றின் முக்கியத்துவத்தை ஆராய்க. (10 புள்ளிக

08. அ. கட்டிளமைப்பருவ மாணவர்கள் எதிர்நோக்கும் சமூக மனவெழுச்சிப் பிரச்சினைக சீர்செய்ய ஆசிரியர் மேற்கொள்ளும் வழிமுறைகளை விளக்குக. (10 புள்ளி

ஆ. நிறைவேறாத ஆசைகளே மனிதனின் பிறழ்வான நடத்தைகளுக்குக் காரணம் என்பத சிக்மன்ட் புரொய்டின் உளப்பகுப்புக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க. (10 புள்ளிக